அதிகாலை மணியோசை ஆனந்தகுயிலோசை
இதயத்தை இதமாய் வருடி உயிரை சுகம் கேட்கும்
அழகான வயல் நாத்து இதமான பூங்காற்று
தேசத்தின் அழகோஅழகு கவிதை பூப்பூக்கும்

அதிகாலை மணியோசை ஆனந்தகுயிலோசை 2

கதிர் முற்றி வயலைப்பாரு வலைமுட்ட மீனைப்பாரு
அந்திநேர அழகைப்பாரு சொந்தம் கொள்ளுதே அந்த
அயலகடல் ஓசை நெஞ்சில் சந்தம் சொல்லுதே
வாழை தென்னை வளத்தைப்பாரு வாழும் மக்கள் பலத்தை பாரு
நாதஸ்வரம் தவிலின் ஓசை நலம் கேட்குதே
எங்கள் தேசம் என்று சொல்லிக்கொள்ள மேய்சிலிர்க்குதே
நாங்கள் வாழும்தேசம் மீது இந்த துயரங்கள் படலாமோ
நல்ல வாழ்கைசோகமாகி கண்ணீரும் வரலாமோ
அட பலம் தானே உண்மை வாழ்வு கரம் கோர்த்து ஒன்று சேரு

அதிகாலை மணியோசை ஆனந்தகுயிலோசை
இதயத்தை இதமாய் வருடி உயிரை சுகம் கேட்கும்
அழகான வயல் நாத்து இதமான பூங்காற்று

வீரம் வாழும் தேசம் பாரு சாதனைகள் நூறு நூறு
உரிமை வானில் சிறகு பூட்டி இதையம் செல்லுதே
உம்மை காதலோடு தேசப்பற்றை கட்டி அள்ளுதே
நாட்டுக்கூத்தின் அழகைப்பாரு ஆட்டம் பாட்டம் மகிழ்வைப்பாரு
கூட்டுக்கிளி இல்லை நாங்கள் காற்றுக்கூறுதே
இந்த பாட்டு சொல்லும் சங்கதிக்குள் வலிமைவாழுதே
இந்த வலிமை நொந்து போனால் எங்கள் கனவுகள் கலையாதா
எங்கள் வாழ்வு வாசம் போனால் இந்த மகிழ்வுகள் தொலையாதா
அட மனசுக்குள் தீயை மூட்டு புயல் வென்று வாழ்ந்து காட்டு

அதிகாலை மணியோசை ஆனந்தகுயிலோசை
இதயத்தை இதமாய் வருடி உயிரை சுகம் கேட்கும்
அழகான வயல் நாத்து இதமான பூங்காற்று
தேசத்தின் அழகோஅழகு கவிதை பூப்பூக்கும்

அதிகாலை மணியோசை ஆனந்தகுயிலோசை 2